வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 19.7.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, மால்டோவா, மாசிடோனியா, ரூமேனியா உள்ளிட்ட நாடுகளுக்கு ஒரு வார கால அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் நாளை தொடங்க உள்ள நிலையில் புதுடெல்லியில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் இன்று நடைபெற்றது.

4 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ள சான்சிபார் அதிபர், குடியரசு துணைத் தலைவர், வெளியுறவுத் துறை அமைச்சர் ஆகியோரை இன்று சந்தித்தார்.

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பட்டத்தை இந்திய வீராங்கனை பி வி சிந்து வென்றார்.

முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, மால்டோவா, மாசிடோனியா, ரூமேனியா உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு வார கால அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். தமது பயணத்தின் முதல் கட்டமாக நாளை மால்டோவா செல்லும் அவர் அந்நாட்டு அதிபர் திரு மயாசந்த் உடன் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்ள உள்ளார். அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றும் குடியரசு தலைவர் அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடுகிறார்.

குடியரசு தலைவர் தமது பயணத்தின் 2-ஆம் கட்டமாக நாளை மறுநாள் மாசிடோனியாவில் அந்நாட்டு தலைவர்களுடன் வேளாண்மை, மருந்தியல், அறிவியல் தொழில் நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பொருளாதார ஒத்துழைப்பு குறித்து விவாதிக்க உள்ளார். இறுதி கட்டமாக வரும் 23-ஆம் தேதி ருமேனியா செல்லும் திருமதி முர்மு அந்நாட்டு அதிபர் மற்றும் இடைக்கால பிரதமர் உள்ளிட்டோரை சந்தித்து ஆலோசனை நடத்துகிறார். இந்தியா-ருமேனியா நாடாளுமன்ற நட்புக் குழு உறுப்பினர்களுடன் அவர் கலந்துரையாடுகிறார். பின்னர் இருநாட்டு வர்த்தக அமைப்பு கூட்டத்திலும் உரையாற்ற உள்ளார். திருமதி முர்மு-வின் இந்தப் பயணம் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் உடனான இந்தியாவின் உறவுகளை மேம்படுத்த வகை செய்யும் என்று வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கூட்டத் தொடர்

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் நாளை தொடங்கி அடுத்த மாதம் 13-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இக்கூட்டத் தொடர் சுமுகமாக செயல்படுவதை உறுதி செய்ய அனைத்து அரசியல் கட்சிகளிடம் இருந்தும் ஒத்துழைப்பை கோரும் வகையில் புதுடெல்லியில் நாடாளுமன்ற இணைப்புக் கட்டிடத்தில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் இன்று அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத் தொடரின் போது பல முக்கிய சட்டங்கள் விவாதத்திற்கும், நிறைவேற்றத்திற்கும் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன. மாநிலங்களவை பிஜேபி தலைவர் திரு ஜேபி நட்டா, மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, இணை அமைச்சர்கள் திரு அர்ஜுன்ராம் மேக்வால், மற்றும் டாக்டர் எல் முருகன் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நாளை தொடங்க உள்ள நாடாளுமன்ற மழைக் காலக் கூட்டத் தொடரின் நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற வேண்டும் என்று மத்திய

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ எதிர்கட்சிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடையே திரு ரிஜிஜூ கூறுகையில் ….

நாடாளுமன்றம் அனைவருக்கும் சொந்தமானது என்றும், பல்வேறு மசோதாக்களைஇத்தொடரில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் திரு ரிஜிஜூ கூறினார். எதிர்கட்சி மற்றும் ஆளும் கட்சிகளின் அனைத்து உறுப்பினர்களும் ஆக்கப்பூர்வமாக பங்கேற்பார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். நாடாளுமன்றம் சுமுகமாக நடைபெறுவதை நாட்டு மக்கள் விரும்புவதாகவும் கூறிய அவர் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை சீர்குலைப்பதால் எந்த அரசியல் ஆதாயமும் கிடைக்காது என்று தெரிவித்தார். மேலும் எதிர்கட்சிகளின் கருத்தை கேட்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் எதிர்கட்சிகளும் அரசின் கருத்தை கேட்கும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் திரு ரிஜிஜூ கூறினார். அவையின் செயல்பாடுகளை சீர்குலைப்பது அனைவரின் நேரத்தையும் வீணாக்குவதோடு வரி செலுத்துவோரின் பணத்தையும் விரயமாக்குகிறது என்றும் அவர் தெரிவித்தார்..

தொடர்ச்சியான இடையூறுகள் காரணமாக கடந்த காலத்தில் நாடாளுமன்றத்தை நடத்துவது மிகவும் கடினமாக இருந்தது என்று அவர் எதிர்கட்சி தலைவர்களுக்கு நினைவூட்டினார்.

ஜோஷி

லடாக்கின் பூகா பள்ளத்தாக்கில் இந்தியா தனது முதல் புவி வெப்பக் கிணறுகளை செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளதாகவும் இது நாட்டின் முதல், ஒரு மெகாவாட் புவி வெப்ப மின் திட்டத்திற்கு வழி வகுக்கும் என்றும் புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டுள்ளார். 14 ஆயிரம் அடிக்கும் அதிகமான உயரத்தில் ஆயிரம் மீட்டர் ஆழத்தில் தோண்டப்பட்ட இந்தக் கிணறுகள் பூமியின் இயற்கை வெப்பத்தை நிலையான மற்றும் தூய்மையான ஆற்றலாக 24 மணி

நேரமும் வெளிப்படுத்தக் கூடியவை என்றும் அவர் தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

*சைக்கிள்-பயணம்*

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க மிதிவண்டி பயிற்சி மிகவும் முக்கியம் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறினார். அவர் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற 82-ஆவது **சண்டேஸ் ஆன் சைக்கிள்** இயக்கத்தில் கலந்து கொண்டு பேசுகையில் நாடு முழுவதும் 15 ஆயிரம் இடங்களில் சுகாதாரப் பணியாளர்கள் மிதிவண்டி பயிற்சியில் ஈடுபட்டதாக கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் வேண்டுகோளுக்கு இணங்க ஞாயிறு தோறும் மிதிவண்டி பயிற்சி பிரபலமாகி உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதன் மூலம் உடல் ஆரோக்கியம் பெறுவதோடு எரிசக்தியும் சேமிக்கப்படுவதாக திரு மாண்டவியா கூறினார். ஒவ்வொரு ஞாயிறும் ஒரு மணி நேரம் மிதிவண்டி பயிற்சிக்காக ஒதுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

*ஜெய்சங்கர்*

4 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ள தான்சானியா ஐக்கிய குடியரசின் சான்சிபார் அதிபர் டாக்டர் ஹுசைன் அலி மவின்யி, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணனை இன்று சந்தித்தார்.

(வாய்ஸ்)

இந்த சந்திப்பின் போது இந்தியா-தான்சானியா உறவுகளின் முழுமையான பரிமாணத்தை இருதலைவர்களும் ஆய்வு செய்ததுடன் எதிர்கால ஒத்துழைப்பிற்கான புதிய வழிகள் குறித்தும் விவாதித்தனர் மேலும் வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, கல்வி, நீலப் பொருளாதாரம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளிலும் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். மேலும் இத்துறைகளில் தான்சானியா

மற்றும் ஜான்சிபாருடன் இணைந்து செயல்படுவதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாகவும் திரு ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

முன்னதாக, இன்று காலை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், சான்சிபார் அதிபர் டாக்டர் ஹூசைன் அலி மவின்யி-யை சந்தித்தார். இந்த சந்திப்பின் போது உயர்கல்வி, திறன்மேம்பாடு, நீர் விநியோகம், சுகாதாரம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து விவாதிப்பதாகவும் திரு ஜெய்சங்கர் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள ஐஐடி மெட்ராஸ் வளாகத்தை பார்வையிட்டது குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய டாக்டர் ஹூசைன் அலி மவின்யி இருதரப்பு கல்வி ஒத்துழைப்பில் ஒரு மைல் கல் முயற்சியாக ஐஐடி மெட்ராஸ் சான்சிபார் வளாகத்தை நிறுவுவதில் இந்தியா அளித்த ஆதரவையும், இந்திய கலாச்சார உறவுகள் மன்றத்தின் கல்வி உதவித் தொகைகள் மற்றும் இந்திய தொழில் நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு பயிற்சி திட்டம் உள்ளிட்ட துறைகளில் இந்தியாவின் உதவியையும், அவர் பாராட்டினார்.

உலகின் தென் பகுதி நாடுகளான இந்தியாவும் தான்சானியாவும் பல்வேறு துறைகளில் நீண்டகால நெருங்கிய நட்புறவையும், ஒத்துழைப்பையும் கொண்டுள்ளன. சான்சிபார் அதிபரின் இந்தியப் பயணம் இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவதில் ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கும் என்று மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பேட்மிண்டன்

இன்று டோக்கியோவில் நடைபெற்ற ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் போட்டியில் நடப்பு சேம்பியனும் உலக தர வரிசையில் 3-ஆம் இடத்தில் உள்ளவருமான ஜப்பான் வீராங்கனை அகானே யமகுச்சியை

21-க்கு 17, 21-க்கு 17 என்ற நேர் செட்களில் தோற்கடித்து இந்திய வீராங்கனை பிவி சிந்து பட்டம் வென்றார். இவர் 2 முறை ஒலிம்பிக் பதக்கம் வென்றவர் என்பதும் ஜப்பானின் முக்கிய பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்பதும் குறிப்பிடத் தக்கது. பட்டம் வென்ற பி வி சிந்துவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். சிந்துவின் வெற்றி இளம் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் என்று பிரதமர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். சிந்துவின் வெற்றி யால் நாடு பெருமை கொள்வதாக திரு மாண்டவியா தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார்.

விளையாட்டு

ஃபிபா உலக கோப்பை கால்பந்து போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் நடப்பு சேம்பியனான அர்ஜென்டினாவும், ஸ்பெயினும் மோத உள்ளன. இந்திய நேரப்படி இன்று இரவு 12.30 மணிக்கு நியுஜெர்சியில் நடைபெறும் இப்போட்டி கால்பந்து ரசிகர்கள் இடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. நேற்று இரவு மியாமி ஸ்டேடியத்தில் நடந்த 3-ஆவது இடத்திற்கான போட்டியில் பிரான்சை 6-க்கு 4 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இங்கிலாந்து வெண்கலப் பதக்கத்தை வென்றது.

வைஷ்ணோ தேவி யாத்ரா

ஜம்மு-காஷ்மீரில் கத்ரா, மற்றும் திரிகூடா மலைப் பகுதிகளில் நிலவும் மோசமான வானிலை காரணமாக ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி யாத்திரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் பாதுகாப்பு கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த யாத்திரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வானிலை சீர் அடைந்து பயணப் பாதை பாதுகாப்பானது என்பது உறுதி செய்யப்பட்டவுடன் யாத்திரை மீண்டும் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரும் நாட்களில் இப்பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தில் கனமழை பெய்து வருகிறது. பல்வேறு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மழை நிலவரம் குறித்து அம்மாநில துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா மற்றும் முதலமைச்சர் திரு உமர் அப்துல்லாவுடன் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, மால்டோவா, மாசிடோனியா, ருமேனியா உள்ளிட்ட நாடுகளுக்கு ஒரு வார கால அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் நாளை தொடங்க உள்ள நிலையில் புதுடெல்லியில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் இன்று நடைபெற்றது.

4 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ள சான்சிபார் அதிபர், குடியரசு துணைத் தலைவர், வெளியுறவுத் துறை அமைச்சர் ஆகியோரை இன்று சந்தித்தார்.

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பட்டத்தை இந்திய வீராங்கனை பி வி சிந்து வென்றார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------